இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 69 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 01 – வெள்ளிக்கிழமை 18 அக்டோபர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 69 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 01 - Friday 18 October 2024 - Dak 12 Pages ₹ 5.00


### அரசின் செயல்பாட்டை மக்கள் பாராட்டுகிறார்கள்! இதில் அரசியல் செய்பவர்கள் பற்றி கவலையில்லை!

# எவ்வளவு மழையையும் எதிர்கொள்ள அரசு தயார்!

## கொளத்தூர் தொகுதியில் ஆய்வு மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 18 -**

**சென்னை - கொளத்தூர் தொகுதியில், நேற்று காலை மழை - வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டு, தூய்மைப் பணியாளர்களுக்கு பல்வேறு நல உதவிகளும், அறுசுவை உணவும் வழங்கிய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மழை வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் கழக அரசின் செயல்பாட்டை மக்கள் பாராட்டுகிறார்கள்! எனவே இதில் அரசியல் செய்பவர்கள் பற்றி எனக்குக் கவலை இல்லை” என்றும், “எவ்வளவு மழை வந்தாலும் அதனை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது” என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2024) கொளத்தூர் பகுதியில், கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, நலத்திட்ட உதவிகளை வழங்கிய பின்பு, செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்பேட்டி வருமாறு:-


**செய்தியாளர்:–** வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்கிறார்கள். அது பற்றி.....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** இதை அரசியலாக மாற்றத்தான் முயற்சி செய்கிறார்கள். எவ்வளவு நன்மையெல்லாம் நடந்திருக்கிறது, என்ன பணிகள் நடந்திருக்கிறது என்பதெல்லாம் மக்களுக்குத் தெரியும்.

**செய்தியாளர்:–** வடகிழக்குப் பருவ மழைக்கு இன்னும் 2 மாதங்கள் இருக்கிறது. அது பற்றி......

**மு.க.ஸ்டாலின் :-** எவ்வளவு மழை வந்தாலும் சமாளிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து நாங்கள் அதற்கான பணிகளை செய்துகொண்டு இருக்கிறோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2024) கொளத்தூர் வீனஸ் நகரில் அமைக்கப்பட்ட மழைநீர் வெளியேற்றும் நிலையத்தின் மூலம், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**தினத்தந்தியில் வந்த பேட்டியை படித்துப்பாருங்கள்!**

**செய்தியாளர்:–** மழைக்கான பணிகள் குறித்து எதிர்மறையான விமர்சனங்கள் வருகிறது. அதைப் பற்றி உங்கள் கருத்து?

**மு.க.ஸ்டாலின் :-** அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இருந்தால் தானே கவலைப்படவேண்டும். அதுபோன்று சூழ்நிலை கிடையாது. இப்போது மக்கள் திருப்தியாக இருக்கிறார்கள். இன்றைக்கு தினந்தந்தி பத்திரிகையை படித்துப்பாருங்கள். அது எங்கள் பத்திரிகை கிடையாது. அந்த பத்திரிகையில் மக்களிடம் பேட்டியெடுத்து பதிவிட்டிருக்கிறார்கள். அதை படித்துப்பாருங்கள்.

**சென்னையில் மழைநீர் வடியாத பகுதிகளில் கவனம் செலுத்தி நடவடிக்கை!**

**செய்தியாளர்:–** சென்னையில் தேங்கியிருக்கும் மழைநீர் அனைத்து இடங்களிலும் வடிந்துவிட்டதா?

**மு.க.ஸ்டாலின் :-** எங்களுக்குத் தெரிந்த வரை எல்லா இடங்களிலும் மழைநீர் வடிந்துவிட்டது. எங்களுக்கு தெரியாமல் சில இடங்களில் இருந்தாலும், அதிலும் உரிய கவனம் செலுத்தி, அதையும் எடுப்பதற்கான முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம்.

**மக்கள் பாராட்டும் அளவுக்கு பணியாற்றிய அலுவலர் – ஊழியர்கள்!**

**செய்தியாளர்:–** மாநகராட்சி ஊழியர்களின் பணிகள் எல்லாம் எப்படி இருந்தது சார்?

**மு.க.ஸ்டாலின் :-** மிகவும் சிறப்பாக, மிகவும் பெருமைப்படக்கூடிய அளவிற்கு, மக்கள் பாராட்டக் கூடிய அளவிற்கு இருந்திருக்கிறது. அதற்காக மாநகராட்சி அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல் ஊழியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் அதே போன்று, மற்ற துறை அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நான் நன்றி கூறியுள்ளேன். வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளேன்.

**செய்தியாளர்:–** சமூக ஊடகங்களில் நிறைய பாராட்டுகள் வந்த வண்ணம் இருக்கிறதே? அது பற்றி......

**மு.க.ஸ்டாலின் :-** பாராட்டுகளும் வருகிறது. அதே நேரத்தில் அதை counter செய்வதற்காக, தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்கள் பணி மக்கள் பணி. அந்தப் பணிகளைத்தான் நாங்கள் தொடர்ந்து செய்துக்கொண்டிருக்கிறோம்.

> **“பாராட்டுகளும் வருகிறது. அதே நேரத்தில் அதை counter செய்வதற்காக, தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்கள் பணி மக்கள் பணி. அந்தப் பணிகளைத்தான் நாங்கள் தொடர்ந்து செய்துக்கொண்டிருக்கிறோம்.”**

**அரசின் முழுத் திறனையும் பயன்படுத்தும் அளவுக்கு மழை!**

**செய்தியாளர்:–** அரசின் முழுத் திறனையும் பயன்படுத்தும் அளவிற்கு மழை அளவு இருந்ததா?

**மு.க.ஸ்டாலின் :-** நிச்சயமாக இருந்தது. அதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. எந்தப் பிரச்சினையும் கிடையாது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

---

### கன மழையில் பாதிக்கப்பட்ட கொளத்தூர் தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு

# மாற்றுத்திறனாளிகள் - தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 18-**

**கனமழையால் பாதிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2024) சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்ததையொட்டி, கொளத்தூர், வீனஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வெளியேற்றும் நிலையத்தில் மழைநீர் வெளியேற்றும் பணிகள், ரெட்டேரியை மேம்படுத்தும் பணிகள், தணிகாசலம் உபரிநீர் கால்வாய் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, பாலாஜி நகரில் நடைபெற்று வரும் மருத்துவ முகாமை பார்வையிட்டு, கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் காமராசர் சத்திரத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, மதிய உணவினை பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் பெய்துவரும் கனமழையையொட்டி தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொடர் மழை பெய்து வந்த நிலையில் 15.10.2024 அன்று வட சென்னை பகுதிகளிலும், நேற்று முன்தினம் (16.10.2024) தென் சென்னை பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டு, நிவாரணப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் முதலமைச்சர் அவர்கள். எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக, அம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, நிவாரண முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் தங்கும் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2024) கொளத்தூர், பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் சி.எஸ்.ஐ. புத்துயிர் சிறப்புப் பள்ளியில் பயிலும் 70 மாற்றுத்திறனாளி குழந்தைகளின் நலன் மற்றும் பள்ளியின் மேம்பாட்டிற்காக 2 கணினிகள், 1 பிரிண்டர், 2 இரும்பு பீரோ, அத்தியாவசியப் பொருட்கள் என 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், அச்சிறப்பு பள்ளியின் தாளாளர் டாக்டர் எட்வின் ராஜ்குமார் அவர்களிடம் பள்ளி மேம்பாட்டிற்காக நிதியுதவியும் வழங்கினார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் ஆகியோர் உடனிருந்தனர்.

**வீனஸ் நகரில் மழைநீர் வெளியேற்றும் நிலையம்!**

அதனைத் தொடர்ந்து, நேற்று (17.10.2024) மழைக் காலங்களில் அதிகளவு தண்ணீர் தேங்கும் தாழ்வான இடங்களான கொளத்தூர், வீனஸ் நகர், கணேஷ் நகர், செல்வி நகர் மற்றும் மஹாவீர் நகர் உள்ளிட்டப் பகுதிகளில் தேங்கும் மழைநீரினை அகற்றிட 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மழைநீர் வெளியேற்றும் நிலையத்தின் மூலம், மழைநீர் வெளியேற்றப்பட்டு வரும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், அங்கிருந்த பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களிடம் மழைநீர் தேங்காமல், பாதிப்பு ஏதும் ஏற்படாமல் சிறப்பாக நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

**ரெட்டேரியை மேம்படுத்தும் பணி!**

நீர்வளத்துறை சார்பில் ரெட்டேரியை 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, அதன் கொள்ளளவினையும் உயர்த்தி, 3.5 கி.மீ. சுற்றுச்சுவர் கட்டும் பணி மற்றும் ரெட்டேரி தெற்கு பகுதியில் உள்ள மதகினை சீரமைக்கும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்